

கடலூர் கிழக்கு மாவட்டம், சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம், சிதம்பரம், கார்த்திகேயன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அமைச்சரும் – மாவட்டக் கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கழக சட்டத்திட்ட திருத்தக்குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., முன்னிலை வகித்தார். மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்துகொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி நல்லூர் தெற்கு ஒன்றியம் பெலாந்துறை ஊராட்சியில் அங்கன்வாடி மைய புதிய கட்டடத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் திறந்து வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் உள்ளனர்.

# கரூர் துயர சம்பவம்: 45 பேரின் வீடுகளுக்குச் சென்று நிதி உதவி!

## முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், அக். 9 -

கரூர் த.வெ.க. கூட்டத் தில் காயம் அடைந்த 45 நபர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று முதல மைச்சரின் பொது நிவாரண நிதியை கரூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட கலெக்டருடன் சென்று வழங்கினார்.

கரூர் வேலுச்சாமிபுரம் விஜய் கூட் டத்தில் ஏற்பட்ட நெரிசலில் மயக்கம் அடைந்து 41 பேர் இறந்தனர். இந்த சம் பவத்தை அடுத்து யாருக்கும் ஆறுதல் கூற விஜய் வரவில்லை. அறிவித்த நிவாரண உதவி தொகையையும் வழங்கவில்லை. அடுத்த கட்ட தலை வர்கள் கைதுக்கு பயந்து தலைமறை வாகி விட்டனர்.



இந்த சம்பவத்தில் 41 பேர் உயிரிழந் துள்ளனர். 110 பேர் காயம் அடைந்தனர். உயிரி ழுந்தவர்கள் குடும்பத்திற்கு தலா ரூ. 10 லட்சம், காயமடைந்த குடும்பத்திற்கு தலா ரூ.1 லட்சமும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர் களின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டு வருகி றது. சம்பவம் நடந்தவுடன் இதை கேள்விப்பட்டு உடனடியாக கரூர் அரசு மருத்துவமனைக்கு வந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறிய பின்னர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர் கள் இதனை அறிவித்தார்கள்.

கரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட காமரா ஜபுரம், எல்ஜிபி நகர், அண்ணாநகர், உழவர் சந்தை, ராயனூர் முகாம், சுக்கா லியூர், கோடங் கிபட்டி, காளியப்பனூர், தாந்தோணிமலை, அம் மன் நகர், கொளந்தானூர், பசுபதிபாளையம், தெற்கு, கருப்பாயி கோயில் தெரு, ஐந்துரோடு, வஉசி தெரு,வெங்க மேடு, அரசு காலணி, மின்னா ம்பள்ளி, திருமுக்கூட லூர், சோமூர், நெரூர் வடக்கு, முனியப்பனூர், குப்பிச்சி பாளையம், ஓடையூர், காதப்பாறை, திட்ட ச் சாலை, வெங்கமேடு, சிவலிங்க ஆசாரியர் தெரு, ஜோதிடர்தெரு, பெரிய குளத்து பாளையம், வேலுச்சாமிபுரம், பெரிய கோதூர், காயத்ரி நகர்., வடமலை கவுண்டனூர், ஆத்தூர் பிரிவு, ஆண் டாங்கோவில் மேற்கு, ஆண்டாங்கோ வில் கிழக்கு, வடிவேல் நகர் ஆகிய பகுதிகளில் நெரிசலில் சிக்கி காயம டைந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பிய வர்களை கரூர் சட்டமன்ற உறுப்பி னர், மாவட் டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி நேரில் சந்தித்தார்.

45 நபர்களை சந்தித்து நலம் விசா ரித்து முதலமைச்சர் பொது நிவாரண நிதியை வழங்கினார்.

கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்க வேல், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், கரூர் மாநகர செயலா ளர் எஸ்பி. கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், பகுதி கழக செயலா ளர்கள் க.சுப்பிரமணியன், ஆர்எஸ்.ராஜா, ஆர். ஜோதிபாசு, விஜிஎஸ் குமார், வெங்கமேடு பாண் டியன், மாவட்டத் துணைச் செயலாளர் எம் எஸ்கே.கருணாநிதி, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் விஜயகுமார், ஒன்றிய செயலாளர்கள் முத்துக் குமார், கோயம் பள்ளி பாஸ்கரன், விகே. வேலுசாமி, மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உடன் சென்றனர்.

### திருப்பத்தூரில்

# தேவாலயம், தர்கா, கல்லறைகளுக்கு சுற்றுச்சுவர்கள்!

## மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவரிடம் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. மனு!

திருப்பத்தூர், அக். 9-

திருப்பத்தூர் சட்ட மன்ற தொகுதியில் சிறு பான்மையினர் அதிகமாக வசித்து வருகின்றனர். இவர்களுக்குச் சொந்த மான தேவலாயங்கள், தர் காக்கள், கல்லறை தோட் டங்களில் அடிப்படை தேவையான பணிகளை செய்து கொடுக்க சட்ட மன்ற உறுப்பினர் A.நல்ல தம்பியிடம் கோரிக்கை வைத்தனர்.

சட்டமன்ற உறுப்பின ரின் தொடர் நடவடிக்கை களின் காரணமாக கடந்த ஆண்டு திருப்பத்தூர் நக ரத்தில் உள்ள தர்காக்க ளுக்கு ஒரு கோடி மதிப்பி லான பணிகளுக்கு வஃபு வாரியம் வாயிலாக நிதி ஒதுக்கீடு பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவ லக வளாகத்தில் மாநில சிறுபான்மையினர் ஆணைய அருட்தந்தை. சொ.ஜோ.அருண் சே.ச. தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைர் திருமதி. க.சிவசௌந்திர வல்லி முன்னிலையில் நடை பெற்ற கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் க. தேவராஜி, அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன் ஆகி யோர் கலந்து கொண்ட னர். சிறுபான்மை பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த ஆலோ சனை கூட்டத்தில் திருப் பத்தூர் தொகுதிக்குட் பட்ட பகுதிகளில்

1. திருப்பத்தூர் ஒன்றி யம், புதுக்கோட்டை ஊராட்சியில் உள்ள புனித சூசையப்பர் ஆல யத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்து கொடுக்க கோருதல்.

2.திருப்பத்தூர் ஒன்றி யம், குரும்பகேரி கல்ல றைத் தோட்டத்திற்கு சுற் றுச்சுவர் அமைத்து கொடுக்க கோருதல்.

3.கந்திலி ஒன்றியம், குனிச்சி ஊராட்சி, மொள காரம்பட்டி கிராமத்தி லுள்ள தர்காவிற்கு சுற்றுச் சுவர் மற்றும் அடிப்படை தேவைக்கான பணிகள் செய்து கொடுக்க கோரு தல்.

4.கந்திலி ஒன்றியம், குனிச்சி ஊராட்சி கிராம புல எண்.234/6 விஸ்தீர்ணம் நிலத்தில் கல் லறைத் தோட்டத்திற் குக்கு சுற்றுச்சுவர் அமைக் கும் பணி

5. புதிய கந்திலி ஒன்றி யம், குனிச்சி ஊராட்சி கிராம புல் எண். 234/7 பரப்பு 0.06.05 ஹெக்டேர் போடுகால் நிலத்தில் உள்ள கபரஸ்தானிற்கு புதிய சுற்றுச்சுவர் அமைக் கும் பணி ஆகிய அடிப் படை தேவையான பணி களை செய்துகொடுக்க வேண்டும் என்ற கோரிக் கைகள் அடங்கிய மனு வினை சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி ஆணைய தலைவரிடம் வழங்கினார்.

சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கைகள் நிறை வேற் றிட ஆணையம் நடவ டிக்கை மேற்கொள்ளும் என ஆணைய தலைவர் உறுதியளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. இராசேந்திரன்

**அக்டோபர் 9 (2023)**



தனது இளம் பருவத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கி, 1970 முதல் 2002 வரையிலான 32 ஆண்டுகள் தொடர்ந்து சேத்துப்பட்டு ஒன்றியச் செயலாளர், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினர், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவர் என பல பொறுப்புகள் வகித்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தச்சம்பாடி ஊராட்சி மன்ற தலைவர், போளூர் வீட்டு வசதி வாரிய சங்க தலைவர், பால் கூட்டுறவு சங்க தலைவர் என பல பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை!

# செஞ்சி ஒன்றியத்தில் புதிய நாடக மேடை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

செஞ்சி, அக். 9 -

விழுப்புரம் மாவட் டம் செஞ்சி ஒன்றியம் வரிகல், கொணலூர் ஊராட்சிகளில்செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ்தலா 8.00 லட்சம் ரூபாய் மதிப் பீட்டில் புதிய நாடக மேடை கட்டிடம் கட் டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற் றது .

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற தலை வர் சுபா குமார் அனைவ ரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ் தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வரிக்கல், கொணலூர் ஆகிய ஊராட்சிகளில் தலா 8 லட்சம் ரூபாய் மதிப்பீட் டில் கட்டப்பட்ட புதிய நாடக மேடை கட்டிடத் தினை மக்கள் பயன்பாட் டிற்கு திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. வைச் சேர்ந்த நிர்வாகி பழனி அக் கட்சியிலி ருந்து விலகி முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ் தான் எம்.எல்.ஏ. முன்னி லையில் தி.மு.க.வில் இணைந்தார் தி.மு.க.வில் இணைந்த நிர்வாகி பழ னிக்கு சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்துத் தெரிவித்தார்.

இதில் மாவட்ட கவுன் சிலர் அரங்க ஏழு மலை,அனந்தபுரம் நகர அவை தலைவர்டாக்டர் கல்யாண் குமார், ஊராட்சி மன்ற தலைவர் கள் அனையேரி ரவி, பாடிப்பள்ளம் தாட்சா யணி கார்த்திகேயன், ஒன் றிய நிர்வாகிகள் செல்வ மணி, குமார், வாசு, அய்யாதுரை, இக்பால், குமரவேல், மணிமாறன், வரிக்கல்கிளைக் கழக நிர் வாகிகள் ராமசாமி, தன சேகர், மாயவன், செந்தா மரை, கண்ணன், முருகன், ஞானவேல் வீரப்பன், கொணலூர்

நாகராஜ், பிச்சாண்டி, மகளிர் அணி ரமணி, கற் பகம், அருள்தாஸ், ஏழு மலை, முத்துராஜ் உள் ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.கே. சீனிவாசன்

**அக்டோபர் 9 (1989)**



கழகத் தோழர்களால் ‘தத்துவ மேதை’ என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.

ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழகம் ஆகியவற்றில் உறுப்பினர். தி.மு.கழகம் தோன்றிய ஆரம்ப நாள் முதல் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

சிறுகதை எழுத்தாளர். கழகம் நடத்திய மாநாடுகளில் தலைமையேற்றும் – திறந்து வைத்தும் இருக்கிறார்.

1962 விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் மூன்று மாத சிறைத் தண்டனை பெற்றவர்.

1970 முதல் 1976 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும், மாநிலங்களவைக்குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**